**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.39/2016**

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 21.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கருணாநிதி (DW–2) | வயது | : | 71/2026 |
| க/த பெயர் | : | திரு. வைரப்பதேவர் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | கூப்பாச்சிகோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். உதய சூரியன் அழைத்து வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். உதயசூரியன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் யார் என்ற விபரம் , பிரதிவாதிகள் 3 முதல் 8 வரையிலானவர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கந்தசாமி தேவரின் தகப்பனாரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது வயது மற்றும் முகவரியை நிரூபிக்கும் ஆவணமான ஆதார் அட்டையை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை, போன முறை முதல் விசாரணையின்போது எடுத்து வந்தேன்.
2) 3ம் பிரதிவாதி எங்கு வசித்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது வீட்டு பக்கத்து தெருவில் வசித்து வந்தார். நான் எந்த தெருவில் வசித்து வருகிறேன் என்றால் கீழத்தெருவில் வசித்து வருகிறேன். எனது ஊரில் பிறந்த கோதண்டராமனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சந்தானலட்சுமியின் அண்ணன். கோதண்டராமன், சந்தானலட்சுமி ஆகியோரின் அப்பா அம்மா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அப்பா பெயர் நாகமுத்து தேவர் அம்மா பெயர் ஞாபகம் இல்லை.
3) பாலசுந்தரம் இறக்கும்போது எந்த முகவரியில் வசித்து வந்தார் என்றால் கீழத்தெரு, கூப்பாச்சிகோட்டையில் தங்கியிருந்தார். கந்தசாமி தேவரின் அப்பா அம்மா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கந்தசாமி தேவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கந்சாமி தேவரின் மனைவியை நான்

பார்த்ததில்லை என்றால் சரியல்ல, நேரில் பார்த்துள்ளேன். **(தற்போது சாட்சியானவர் நாகமுத்துவின் மனைவி பெயர் ஜெகதாம்பாள் என்று சொல்கிறார்).** சந்தானலட்சுமி எந்த இடத்தில் இறந்து போனார் என்றால் மன்னார்குடி பாலகிருஷ்ணா நகரில் உள்ள மருத்துவமனையில் இறந்தார். மருத்துவமனையின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சந்தானலெட்சுமி எந்த தேதியில் இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை 2016 இல் இறந்தார்.

4) பாலசுந்தரம் எந்த முகவரியில் இருந்தபோது இறந்துபோனார் என்றால் கூப்பாச்சி கோட்டையில் இறந்துபோனார். பாலசுந்தரம் எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை 2016 இல் இறந்தார். கந்தசாமி தேவர் மற்றும் அவரது தகப்பனாரை நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. பாலசுந்தரம் சிங்கப்பூரில் வேலை பார்த்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அவர் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் மின்சார துறையில் வேலை பார்த்தார். நான் அடிக்கடி சிங்கப்பூர் சென்று வருவதுதான் எனது தொழில் என்றால் 1990–1994 வரை சிங்கப்பூர் சென்று வந்தேன்.

5) எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. கோதண்டராமன் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது உதயசூரியன் வழக்கு போட்டது தான் தெரியும். உதயசூரியனின் உடன் பிறந்த சகோதர சகோதரி பெயர் தெரியுமா என்றால் உதயசூரியனின் உடன் பிறந்த சகோதரிகள் மணிமேகலை, தையல்நாயகி. உதயசூரியனுக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் பங்காளி.

6) கணேச தேவரை எனக்கு தெரியுமா என்றால் எங்கள் தெருவில் கணேச தேவர் என்று யாரும் இல்லை. கந்தசாமியின் மகன் பாலசுந்தரம் என்றால் சரிதான். முருகையன், உலகநாதன் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முருகையன், உலகநாதன் இறக்கும்போது என்ன வயது இருக்கும் என்றால் முருகையனுக்கு 65–70 வயது, உலகநாதனுக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும், முருகையன் இறந்து 10 வருடம் கழித்து உலகநாதன் இறந்தார். முருகைய தேவர் 30 வருடத்திற்கு முன்பும் உலகநாதன் 20 வருடங்களுக்கு முன்பும் இறந்ததால் மேற்கண்ட இரண்டு பேரையும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

7) நான் முருகையனையும், உலகநாதனையும் நேரில் பார்த்ததில்லை என்றும் உதயசூரியன் என்னிடம் கேட்டதற்கு இணங்க மேற்கண்ட இரண்டு பேரையும் நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கந்தசாமி தேவரையும் , கணேச தேவரையும் பார்த்ததில்லை என்றால் சரிதான். கணேச தேவரை நான் பார்த்ததில்லை என்பதால் அவரது மகன்களான முருகையன், உலகநாதனையும் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. பாலசுந்தரம், முருகையன், உலகநாதன் ஆகியோர் உடன் பிறந்த சகோதரர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8) முருகையன் மற்றும் உலகநாதனை நான் எந்த வயதில் பார்த்துள்ளேன் என்றால் எனக்கு 24 வயது இருக்கும்போது முருகையனையும் , 35 வயது இருக்கும்போது உலகநாதனையும் பார்த்துள்ளேன். முருகையன், உலகநாதன் ஆகியோர் எந்த தெருவில் வசித்து வந்தார்கள் என்றால் கூப்பாச்சிகோட்டையில் முருகையன் கீழத்தெருவிலும், உலகநாதன் மெயின்ரோட்டிலும் வசித்து வந்தார்கள். முருகையனின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியும் தனபாக்கியம். உலகநாதனின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியும் கோவிந்தம்மாள். முருகையன், உலகநாதன் ஆகியோர் எந்த வகுப்பு வரை படித்துள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

9) முருகையன், உலகநாதன் ஆகியோரின் பிறப்பு சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் கேள்விப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நேரில் பார்த்தன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதிகள் பற்றிய விபரம் எதுவும் தெரியாமல், 3 முதல் 8 பிரதிவாதிகள் பராமரிப்பில் சந்தாலெட்சுமி இருந்து வந்தார் என உதயசூரியன் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சந்தானலெட்சுமி , கோதண்டராமன் யார் முதலில் இறந்தது என்றால் சந்தானலட்சுமி முதலில் இறந்தார். சந்தானலட்சுமி இறந்த சமயத்தில் கோதண்டராமன் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல.

10) சந்தானலெட்சுமியை மருத்துவமனையில் சேர்த்து பராமரித்தது கோதண்டராமன் தான் என்றும் உதயசூரியன் இல்லை என்றால் சரியல்ல. பாலசுந்தரம் என்பவர் கந்தசாமி தேவர்–காத்தாய் அம்மாளுக்கு பிறந்தார் என்றும் முருகையன், உலகநாதன் ஆகியோர் கணேச தேவர்–காத்தாய் அம்மாளுக்கு பிறந்தனர் என்றால் சரியல்ல. பாலசுந்தரம் முருகையன் ,

உலகநாதன் ஆகியோர் கந்தசாமி தேவருக்கு பிறந்தார்கள் என்பதற்கான எழுத்து மூல ஆவணங்கள் பார்த்தேனா என்றால் இல்லை. நான் எனது பங்காளியான உதயசூரியன் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) நான் கூப்பாச்சிகோட்டையில் வசித்து வரவில்லை என்றும் வெளிநாட்டில் வசித்து வருவதால் மேற்கண்ட விபரங்களை உதயசூரியன் சொல்லியதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது காலாவதியாகிவிட்டதால் அது எங்கு உள்ளது என்று தெரியாது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.22 12:55:23 +0530

District Munsif
Mannargudi.